புத்தகம் ௧௪.] உ [ஸஞ்சிகை ௧௫.

ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

**வைதிகர்:—** (லௌகிகரைக் கண்டு) அய்யர்வாள் ! கொஞ்சநாளாகக் காணவே இல்லையே.

**லௌகிகர்:—** ஆமாம். காரியவசத்தால் பல ஊர்கள் போய்வர வேண்டியதாயிருந்தது. ஊரிலில்லை.

**வைதிகர்:—** போயிருந்தவிடங்களில் என்னஎன்ன விசேஷம் கேள்விக்கு வந்தது.

**லௌகிகர்:—** வேறென்னவிசேஷம், ஊருராய்க் கண்டவிடங்களில் பிராமணர்களை அதிலும் வைதிகர்களைப்பற்றிப்பேசுகிற பேச்சு காது கொண்டு கேழ்க்க முடியவில்லை. வைதிகர்களுக்கு இதுகளெல்லாம் ஒன்றும் தெரியாது. பெரும்பாலும் வைதிகர்கள் பேபர் படிக்கிறதே கிடையாது நாட்டு நடப்பையும் தெரிந்து கொள்ளுகிறதில்லை. புது நாகரீகம் பிரபலமாய் பரவி வருகையிலும் இவரது பழைய கர்நாடகப் பேச்சையே பேசிக்கொண்டிருப்பார்கள். இவர்கள் பேச்சை யார் கேட்கிறார்கள். எதற்காக இப்படிச் செய்கிறார்களோ தெரியவில்லை பொது ஜனங்களுடன் சேர்ந்து தேசமுன்னேற்றத்திற்காக பிரவர்த்திப்பார்களானால் ஜனங்கள் இவர்களை எவ்வளவு கொண்டாடுவார்கள் இந்தப் பெருமையடைவதையெல்லாம் விட்டுப்போட்டு மொரட்டுப் பிடிவாதப் பேச்சையே பேசிக்கொண்டிருப்பது எங்களுக்கே பிடிக்கவில்லையென்றால் எவருக்குத்தான் பிரியமாயிருக்கும். இனிமேல் இவர்கள் பிடிவாதத்தை விடுவதுதான் நலம்.

**வைதிகர்:—** வைதிகர் பிடிவாதம் பிடிக்கின்றாரா ? மற்றவர் பிடிக்கின்றாரா ? பிடிவாதமென்றால் என்னவென்று உமக்குத் தெரியுமா ? பிரமாணத்தால் நியாயப்படி ஒரு விஷயத்தைத் தெரிந்துகொண்டு அப்படியே கூறுவது பிடிவாதமாகுமா ? பிரமாணத்தை நம்பாமலும் பிரமாணக்கிரந்தங்களுக்கு நியாயப்படிக்குள்ள பொருளைத் தெரிந்து கொள்ளாமல் தாறுமாறாகப் பொருள் படுத்திக்கொண்டு தான் நினைத்ததையே ஸரியென்று ஸாதிப்பதற்காகப் பேசுவதுதான் பிடிவாதமாகும். வைதிகர் எப்பொழுதேனும், எந்த விஷயத்தையேனும் பிரமாணமில்லாமல் கூறுகின்றார்களா ? கிரந்தங்களுக்கு அர்த்தம் தெரிந்துகொள்ள வேண்டுமானால் மீமாம்ஸா நியாயப்படி விசாரம் செய்யவேண்டும். எந்த லௌகிகர்கள் குருமுகமாகமீமாம்ஸைபடித்துபிரமாணக்கிரந்தங்களுக்கு ஸரியானபொருளைத்தெரிந்துகொண்டிருக்கிறார்கள். சிலர்பிரமாணமே ஒன்றும் வேண்டாம். நம்மிஷ்டப்படி மெஜார்ட்டியில் தீர்மானப்படுத்தி கட்டுப்பாடாயிருந்து விடுவோமென்கிறார்கள். வேறு சிலர் பிரமாண கிரந்தங்களெல்லாம் நம்மிஷ்டத்திற்கொத்த பொருளுடையனவாகத் தானிருக்கின்றது என்றார்கள். இவர்கள் பொருள் செய்கின்றபடியானால் எந்த விஷயந்தான் ஸாதிக்க முடியாது. பிரௌடா விவாஹம் மாத்திரமல்ல. புத்திரனைப் பெற்றவள் விவாஹமும் மாதிருகமணமும் ஸாதித்து விடலாம். அப்படியெல்லாம் பேசுகிற பேச்சு பிடிவாதமில்லை. வைதிகர் பிரமாண பூர்வகமாகக் கூறுவதா பிடிவாதம். இதனால் எவருடைய பிடிவாதத்தை விடுவது நலமென்று ஆலோசித்துப் பார்த்து நல்வழி நாடுவீராக,

சுபம் ! ப-ர்.

# ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ சித்திரை-௴ ௯௨

## மஹாநதிக்கரையில் மஹாமந்திரோபதேசமாம்.

நம்பாரதநாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்
கள் ப்ரம்மதேவர்முதல் நம்பரமாசாரியாள்வரை பல்கோடிப்பேர்
கள். அவர்களெல்லோரும் பிரமாணநூல்களாகிய பதினெட்டு
வித்தியாஸ்தானங்களில் கூறப்பட்ட ஐஹிகாமுஷ்மிக புருஷார்த்தங்
களின் ஸாதனங்களைச்சரிவர அனுஷ்டித்து, பல்லாயிரமாண்டு
களாக மண்ணுலகில்வாழ்ந்து, போகபோக்கியங்களை யனுபவித்து
ஒவ்வொருஸாதனங்களுக்கும் அததன்பயன்களுக்குமுள்ள கார்
யகாரணபாவங்களை நீண்டகாலத்தனுபவத்தால் தீர்க்காலோசனை
செய்து தீர்மானித்து ஸ்மிருதிரூபமாக எழுதிவைத்திருக்கிறார்கள்
பிறகு விண்ணுலகிற் சென்று நமக்கெல்லாம் அனுக்கிரஹம் செய்
யக்கூடிய தேவதாஸ்வரூபமாக விளங்குகின்றார்கள். ஆயிரக்கணக்
காக ஜீவித்திருந்த நம்முன்னோர்களின் புத்திக்கெட்டாத முன்
னேற்றத்திற்குரிய ஆலோசனைகள் பலவாறாகத் தற்காலத்திய
மேதாவிகளுக்குத் தோன்றியிருக்கின்றன. அதற்குமூலப்பிர
மாண மின்னதென்று புலப்படவில்லை, மிகவும் அற்பமான இவர்
களது ஜீவிதகாலத்தில் எப்பொழுது எது தோன்றுமோ அப்
பொழுது அதைஸாதிக்க தன்சார்பாயிருக்கும் பத்துப்பேர்களைச்
சேர்த்துக்கொண்டு முயற்சிசெய்துபார்க்கிறது, அது சரிப்படா
விட்டால் வேறொன்றை ஆரம்பிக்கிறது. இவ்வாறாக இவர்களது
ஸ்வல்ப ஜீவனகாலத்தில் எந்தகாரியத்தின்பயன் அனுபவிக்கக்
கூடியதாகும் உதாஹரணமாக ஒருவர் ஆதியில் ஹிந்துவாயிருந்து
அந்தஸமயத்தில் ஏதோவொன்றைச்செய்துபார்த்து ஸரிவாராமல்,
வேறுமதத்திற்சேர்ந்து அதிலும் எதையோ செய்யஆரம்பித்து
அதுவும் ஒழுங்காய்வாராமல், மற்றொருஸங்கத்தில் சேர்ந்து அங்
கும் ஒன்றும்பலிக்காமல், வேறொன்றில் சேருவதாகப் போய்க்
கொண்டேஇருக்கிறதேயல்லாமல் ஒருவிடத்திலாவது நிலைத்து

நின்று ஒருகாரியத்தையாவது ஸாதித்ததாகத்தெரியவில்லை. இவர்களெல்லாம் சேர்ந்துதான் தேசத்தை முன்னேற்றமடையச்செய்யப்போகிறார்களாம். அநேகஜன்மங்களாக ஒரேவழியில்நின்று ஒருகாரியத்தைஸாதிக்க வெகு சிரமப்பட்டிருக்கிறார்கள் நம்முன்னோர்கள்என்று ஸ்ரீமத் பாகவதாதி புராணங்களில் பிரஸித்தமாயுள்ளது, அவ்விதம்தற்காலத்திபவர்கள் வர்ணாசிரமதர்மத்தைத் தொலைத்துவிடவேண்டுமென்ற எண்ணங்கொண்டு உபதேசிக்கின்றமுறை மிகவிசித்திரமானது. கன்னிகைகளுக்கு நல்லவரன் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றவர்கள்போல நமது கிழ்வார்ஸ—களும் அப்படிக்கஷ்டப்படாமலிருக்க ஒரு பெரிய சங்கங்கூடி ஆலோசித்து, விவாஹத்தையே நிறுத்திவிட்டால் ஸந்ததியுண்டாகாது ஆகவே அந்தக்கஷ்டம்நேராதுஎன்றுதீர்மானித்து இரகஸியமாய்உபதேசிக்கிறார்கள், விவாஹமில்லாமற்போனாலும்வியபிசாரத்தால் பிரஜாவிருத்தியானால் என்னசெய்கிறது என்றால் இதற்காக ஒருசங்கத்தார்கூடி, ஸ்திரீகளுக்கு பிரஸவிக்கிற ஸ்வபாவத்தையே மாற்றிவிடவேணுமென்று உபதேசிக்கிறார்கள், இதுவெல்லாம் கொக்கின்தலையில் வெண்ணெயைவைத்து அதுஉருகி கண்ணில் விழுந்து கொக்குக்கு கண்தெரியாதபோதுஉடனே அதைப்பிடித்துவிடுகிறகதையாயிருக்கிறது என்றால் அப்பொழுது சொல்லுகிறார்கள் விவாஹாதிகள் எத்தனையோகாலமாகப்பழக்கத்திலிவந்துவிட்டபடியால் உடனே மாற்றிவிடமுடியாதுதான், பாலிகா விவாஹத்தையாவது தடுப்போம், பிரௌடாவிவாஹத்தை முடிப்போம் எப்படியாவது வர்ணாசிரமத்தைக்கெடுப்போம்என்று உபதேசிக்கிறார்கள். தர்மத்தையே பெரிதாகநினைத்திருக்கும் நம்பரதநாட்டாருக்கு இந்ததர்ம த்வேஷிகளது உபதேசம் எப்படிகாதில்ஏறும், அல்லாமலும் சிலர், 10—வருஷங்களுக்குமுன் தீண்டாமையொழிப்பது சாஸ்திரவிரோதமென்று பெரியஸபைகளைக்கூட்டி சாஸ்திரவிசாரம்செய்து நிச்சயித்திருந்தும் அதையெல்லாம் மறந்துவிட்டு மஹாநதிக்கரையில் மந்திரோபதேசத்திற்கு அர்ஹமில்லாதவர்களுக்கெல்லாம் மஹாமந்திரங்களையுபதேசிக்கத்தலைப்பட்டு விட்டார்களாம். அதனால் இந்தியாவே க்ஷேமமடையப்போகிறதாம் என்றுதர்ம த்வேஷிகள் சந்தோஷப்படுகிறார்களாம் என்னகால வித்தியாஸம். மந்திரங்களை எந்தப்பிரமாண வாயிலாகத்தெரிந்து கொள்ளுகிறார்களோ, அதேபிரமாணக்கிரந்தங்களில் அவைகளை

உபதேசிக்கவும், உபதேசம்பெறவும், இன்னாரின்னார் அதிகாரி யென்றும், அனதிகாரிக்கு உபதேசித்தால் நேரும்பயன் இன்ன தென்றும் கூறப்படுவதை கெவனிக்கவில்லைபோலும், இவ்வாறு விஷயம்தெரியாத தர்மத்வேஷிகள் செய்யும் எந்தஉபதேசந்தான் பலிக்கப்போகிறதோதெரியவில்லை. வர்ணாசிரமதர்மத்தை விதிப்படி செய்யவேணுமென்று வைதிகர்கூறுவாராகில் அது அவர்கள்காதில் நாராசம்போல் விழுகிறது. பாரதநாட்டை வாஸஸ்தானமாகக் கொண்ட வைதிகவம்சத்திற் பிறந்தவருள் சிலர்கோத்திர ஸூத்திர ஸம்பந்தத்தைச் சொல்லிக்கொண்டிருந்தும் அவர்கள்சொல்லுவதையே அங்கீகரிக்கிறார்கள், அவர்களது ஸபையில் அக்கிராஸனம் வஹிக்கிறார்கள் தர்மஸபையென்றால் முகத்தைத்திருப்பிக் கொள்ளுகிறார்கள் இவர்களது உபதேசத்தில் நமது ஆர்யச்சிறுவர்கள் அகப்படாமல் வர்ணாசிரமதர்மத்தைநாடி சுகித்திருப்பார்களாக. சுபம்! டீ-ர்.

---

## ஓர் விக்ஞாபனம்.

இவ்வருஷம் 11-வது ஸஞ்சிகையில் 166-ம் பக்கம்முதல் எழுதியிருக்கும் "கம்பராமாயணம்" என்ற விஷயத்தைக் கண்ணுற்றேன். அதில் வ்யாஸாதிகளால் உண்டாக்கப்பட்ட புராணாதிகளை தம்தம் தேசபாஷைகளில் இயற்றிப்படித்தல் கூடாது, அவ்விதம் செய்பவன் நாசமடைவான், ஸாதாரணமனிதர்கள் பேசும் பாஷைகளிலியற்றப்பட்ட புராணங்களைக்கேட்டவன் நாகமடைகிறான் என்று ஹாரீதஸ்மிருதியிலிருந்தும், இன்னும் பல ஸ்மிருதி சுலோகங்களாலேயும் நன்கு விளக்கியிருக்கிறது. நிற்க பகவான் கீதையில்

**यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।**
**तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥**

யார்யார் என்னை எப்படி எப்படி பஜிக்கிறார்களோ நான் அந்தந்த விதமாகவே தர்சனமளிக்கிறேன் எனக்கூறியிருப்பதிலிருந்து புராணம் படிப்பதும், அதாவது பகவானுடைய ஸ்துதியோ, புரா

ணமோ ஆர்யபாஷை ஸம்ஸ்க்ருதத்திலிருந்தாலும் அதை அவாவர் பாஷையில் இயற்றிப்படிப்பது தோஷமில்லை யெனவேயாகும். தீங்கள் எல்லாவற்றையும் கட்டாயம் ஸம்ஸ்க்ருதம் படிக்கவேணுமென்று சொல்லவேணுமேதவிர புராணங்களை அவரவர் பாஷையில் இயற்றிப்படிப்பது தோஷம் என்பது கீதாவாக்கியத்திற்கு முரண்படுகிறது அதிலும் கம்பர் மஹாவித்வான், ஸரஸ்வதிகடாக்ஷம் பெற்றவர், ஆதலால் கம்பராமாயணம் என்று எடுத்து ஆக்ஷேபிப்பதற்கு ஒருவகையிலும் இடமில்லை. ஆகையால் இவையெல்லாவற்றிற்கும் அடுத்த ஸஞ்சிகையிலேயே பதிலை எதிர்பார்க்கும் நண்பன்

எஸ். ஸஹஸ்ரநாமய்யர்.

---

# ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(192-வது பக்கத்தொடர்ச்சி.)

அவர்களில் ஒரு கன்னிகை மட்டிலும் தங்கித்தயங்கும்போது, பெண்ணே! எல்லாத் தோழிமார்களும் தங்களிருப்பிடஞ் சென்றுவிட்டனர். நீ மட்டிலும் ஏன் தனிமையாய் இருக்கிறாய் என்று தீக்ஷிதாள் கேட்டனர். அப்போது அச்சிறுமி, தாங்கள் பக்கத்திலிருக்கையில், நான் தனித்திருக்கிறேன் என்பது எவ்வாறு பொருந்தும் என்று இயம்பி வெட்கத்துடன் கால் கட்டைவிரலால் பூமியைக் கிறிக்கொண்டு நின்றனள். அப்போது அப்பெண்மணியின் கருத்துணர்ந்த தீக்ஷிதாள் அவள் வைஷ்ணவப் பெண்ணாயினும் தப்தமுத்திரை முதலான அடையாளங்கள் ஏற்பட்டிராமையை அறிந்து சாஸ்திரீயமான தோஷம் இல்லையென்று துணிந்து தனது பக்தனான கிருஷ்ணராஜனுடைய ஸஹாயத்தால் விவாஹஞ் செய்துகொள்ளக் கருதி அச்சிறுமியை பல்லக்கில் ஏற்றிக்கொண்டு ஸ்ரீகாஞ்சியை அடைந்தார். பிறகு கிருஷ்ணராஜன் விவாஹத்தை விமர்சையாய் நடத்தி, தம்பதிகளை நமஸ்கரித்து ஆசி கூறப்பெற்று இடையூறு செய்கின்றவரை அரண்மனைக்கு அனுப்புங்கள் என்று ராஜபுருஷர்களுக்குக் கட்டளையிட்டு அரண்மனை சேர்ந்தான். இஃதிவ்வாறிருக்க, அப்

பெண்ணின் தகப்பனர் முதலான உறவினர் இச்சமாசாரத்தைக் கேள்விபுற்று ஆக்ராஹத்துடன் வரவே அவர்களை ராஜபுருஷர்கள் அரண்மனைக்கு அனுப்பினர்கள். அரசன் அவர்களை உபசரித்து விசாரிக்கையில் இப்பெண்ணின் ஜனகன் தனது கடனைத் தீர்க்கும்பொருட்டு குலசீலமில்லாத தனிகனுன ஒரு கிழவனுக்குப் பெண்ணைக் கொடுக்கத் தீர்மானித்திருப்பதாக அறிந்து உடனே அனேக ஆயிரம் பொன்னை அளித்துச் சமாதானப்படுத்தினன். அவரும் ஸகல குண கணங்களுக்கு ரத்னுகாமான ஜாமாதாவை அடைந்து சேஷஹோமம்வரை இருந்து கலியாணத்தைக் கண்டு களித்து தம்பதிகளை ஆசிர்வதித்து இக்குமாரியிடம் ஜனிக்கும் முதல் புதல்வனுக்குத் தனது நாமமிடவேண்டுமென வேண்டிக்கொண்டு தீக்ஷிதாளின் விடைபெற்றுத் தன் ஊர் சேர்ந்தாரென்றும் பிறகு அவ்வாறே அப்பெண்ணின் மூத்தகுமாரனுக்கு ரங்கராஜன் என்று ஆச்சார்யதீக்ஷிதாள் நாமகரணம் செய்தாரென்றும் ஆன்றோர் கூறுகின்றர்.

நளசரிதநாடகத்தில் ஆச்சார்யதீக்ஷிதாளின் மகிமை வரையப்பட்டிருக்கிறது. இம்மஹான் செய்த யாகமும், தோண்டின தடாகமும், கட்டுவித்த அக்கிரஹாரமும், நிர்மித்த ஆலயமும் ஆகியவைகளில் ஒவ்வொன்றும் எட்டு.

## 3. ரங்கராஜதீக்ஷிதர்.

இம்மஹானும் தகப்பனரைப்போலவே ஸகல சாஸ்திரங்களையும் கசடறக்கற்று உலகெங்கும் புகழ்பெற்றர். கிருஷ்ணராஜனும் ஆச்சார்யதீக்ஷிதாளுக்குப்பிறகு குருபுத்திரனை ரங்கராஜதீக்ஷிதரையே தமக்குக் குருவாகக்கொண்டான். அத்வைதவித்யா முகுரம்முதலான நூல்களையியற்றியவர் இவரே, விச்வஜித்து யாகத்தால் இவர் எங்கும் புகழ்பெற்றர், கிருஷ்ணராஜன் கலி 4630-ல் விண்ணுலகமேகினன், இந்த ரங்கராஜமஹானே இப்போது யான் எழுதப்புகுந்த சரித்திரத்திற்கு நாயகனை ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதாளைப் புத்திரனகப்பெறும் பாக்கியம் வாய்ந்தவர். இவர் ஸகல ஸம்பத்துக்கள் நிறைந்தவராயினும் புத்திரப்பேறில்லாமல் மிக வருந்தி, சிவாராதனத்தாலேயின்றி வேறு உபாயத்தால் தமதிஷ்டம் கைகூடாதென உறுதிகொண்டு குலதெய்வமான மார்க்கஸஹாயரை யாராதித்துவந்தார். பின்பு அவர் ஒரு தினம்

தனது பத்னியோடு ஸந்நிதியையடைந்து மார்க்கஸஹாயரை வேண்டவே அப்போது 'ஞானகலாதரனான ஸ்ரீநடராஜனின் அருளால் உனது இஷ்டம் கைகூடும்' என்று அசரீரிவாக்கு உண்டாகவே ஆநந்தம் மேலிட்டு தில்லையையடைந்தார். அந்த க்ஷேத்திரத்தில் நுழையும்போதே அவரது மனம் மிகவும் நிர்மலமாயிற்று. மார்க்கஸஹாயரின் அசரீரிவாக்கை உறுதியாகக்கொண்டு ஸர்வேச்வரனையே புதல்வனாக அடையவேண்டுமென்று கொடுமான தவஞ்செய்யத்துணிந்து அதிகாலையில் எழுந்து, சிவகங்கையில் நீராடி, நித்யகர்மாநுஷ்டானங்களை முடித்து, ஸ்ரீ நடனஸபையையடைந்து பில்வதளங்களால் பகவானையர்ச்சித்து, பொன்னம்பலத்தரசன்முன்னிலையில் தாண்டவமாடி, வீடுசேர்ந்து ஆதித்தியத்தால் யாவரையும் ஸந்தோஷப்படுத்திக்கொண்டு முக்கரணசுத்தியோடு ஸ்ரீநடராஜரிடமீடுபட்டு ஆறுவருஷகாலம் கழித்தார்.

இதேதருணத்தில் மத்வர், தாதாச்சாரியார் மற்றுமுள்ள பல பிறமதஸ்தர்கள் ஸ்ரீகாஞ்சீமுதலான நகரத்து மன்னர்களைத் தமக்கு வசமாக்கிக்கொண்டனர்.

இவ்விதம் உறுதியுடன் தவஞ்செய்ததாலே ஸந்தோஷித்த ஸ்ரீநடராஜர் ஒருநாள் பொன்னம்பலத்தில் 'பக்தமணியே! நான் உன் தவத்திற்கு ஈடுபட்டு எனது அம்சம் நிறைந்த ஸ்ரீபதஞ்ஜலியையே உனக்கு மைந்தனாக ஆவிர்பவிக்கச்செய்கிறேன்' என்று ஆகாயவாணியால் அறிவித்தார். அம்ருதப்பிரவாஹம்போன்ற அவ்வசரீரியைச் செவிசாய்த்துக் களிப்புற்றுப் புறப்படவே, எதிரே பழரஸத்தோடுகூடின ஸ்வர்ணபாத்திரத்தைக் கரகமலத்தில் ஏற்றிக்கொண்டு ஒரு தீக்ஷிதர் முன்தோன்றி பகவானுடைய பூஜாபிஷேகதீர்த்தத்தோடு சேர்ந்த இப்பழரஸத்தை பத்னிக்குக் கொடு என்றுசொல்லி மறைந்தார். உடனே ஆச்சர்யக்கடலில் மூழ்கின ஸ்ரீ ரங்கராஜதீக்ஷிதாள் ஸந்தோஷத்தோடே கரபங்கயத்தில் வாங்கிக்கொண்டு வீடுசேர்ந்து பூஜித்து பிராம்மணஸந்தர்ப்பணஞ்செய்து அவர்களின் மந்திராக்ஷதைபெற்று பாரியைக்கு அப்பழரஸத்தை அளித்தார். அப்பாக்கியவதி ஆவலோடு அதைப் பானஞ் செய்ததாலேயே கர்ப்பிணியானாள். பகவானுடைய அம்சஞ்சேர்ந்ததாலே அப்பதிவிரதாமணியின் சரீரத்தில் அபூர்வமான மேனியுண்டாயிற்று. அப்பெண்மணி அநுதினமும் ஸ்ரீசிவகாமியம்மை நேசனைத்தியானஞ்செய்துகொண்டு, காந்தனால்

கொடுக்கப்பட்ட தோஹதங்களையும் பெற்றுப் போகசந்தங் கொண்டவளாய் கர்ப்பம் வளரவளர பக்தியும் மேலிடமேலிடப் பிரஸவகாலத்தை எதிர்பார்த்தவண்ணமாயிருந்தாள்.

## 4. அப்பய்யதீக்ஷிதாளின் அவதாரம்.

नव वा दश वा मासानन्तःशयित्वा ।

என்று சாந்தோக்கியம் ஓதியபடி 10-வது மாதத்தில் அப்பெண் மணியின் உதரத்திலிருந்து ஈச்வரனே தான் வாக்களித்தபடி புத்திரரூபியாக ஆவிர்பவித்தார்.

கலி-4654 பிரமாதிச வருஷ கன்யாமாஸம் 5உ ஸோமவாரம் கிருஷ்ணபக்ஷப்பிரதமை உத்தரப்ரோஷ்டபதாநக்ஷத்திரம் ஸாத்விகவேளையில் ஸ்ரீமான் அப்யதீக்ஷிதாளின் அவதாரம் என்று சிவாநந்த யோகிகள் தமது தீக்ஷிதவிஜயத்தில் விரிவாய்விளக்கியிருக்கிறார்.

தீக்ஷிதாளின் அவதாரகாலத்தில் ஸாதுக்களின் மனம் நிர்மலமாயிற்று, துஷ்டர்களின் மனம்கலங்கிற்று, நதிகள்தெளிவானப் பிரவாஹத்தால் இச்செய்தியை சமுத்திரத்திற்கு அறிவித்தன உலகமே இவரது அவதாரத்தைப்போற்றியது, இம்மஹானுடைய அவதாரம் சிவரஹஸ்யம், ஸப்தமாம்சத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அக்கிரந்தத்தில்

म्लेच्छाचारपरास्सर्वे दरिद्राश्च द्विजातयः ।

என்று தொடங்கி, கலியின் கொடுமையால் உண்டான சீர்கேட்டை நீக்குவதற்கு அவதரித்த, ஸ்ரீபகவத்பாதாள் ஹரதத்தாச்சார்யாள் இவர்களின் மஹிமையைக்கூறி,

दीक्षितोऽपि भवेत्कश्चित् शैवश्छन्दोगवंशजः ।
भासुराचारनिरतः शिवभक्ताग्रणीः सुधीः ।
शैवशास्त्रं तदा भूयो लुप्तं विस्तारयिष्यति ॥

என்றச்லோகங்களால், தீக்ஷிதாள் சிவபக்தாள்என்றும் ஸாமவேதியென்றும் கர்மாநுஷ்டானபரர்என்றும் அக்காலத்தில் குன்றியிருந்த சைவ சாஸ்திரங்களை ப்பரவச்செய்தனரென்றும் வியக்தமாகிறது அச்சிவரஹஸ்யத்திலேயே மற்றுமோரிடத்தில்,

कलौ छन्दोगोऽपि श्रुतिशिखरतात्पर्यवचनैः
मम ग्रन्थोद्ग्रन्थैः जयति मतवादिद्विपहरिः ।

भिनत्येवं दीक्षाक्षपितदुरवृत्तिः शिवपदे
शिवे दभ्रस्थाने भवति च ततोऽन्ते मम गणः ॥

என்றச்லோகத்தால் ஸாமவேதியாய்க் கலியில்அவதரித்து வேதாந்தசாஸ்திரத்தின் தாத்பர்யத்தை விளக்குகின்ற வசனங்களால் சிவமஹிமையைப் பாவச்செய்து பிறமதஸ்தர்களாகிற மதங்களுச்குக்சிங்கமாயும் யஞ்ஞாதிதீக்ஷைகளால் ஸுகமாகவேகால யாபனஞ்செய்பவாாயும் விளங்கி முடிவில் கணுவதாா பூதாளான அப்பய்யதீக்ஷிதாள், மங்களமான சிதம்பாத்திலே சிவனிடத்திலேயே கலந்துகொள்கின்றனர் என்று ஸ்பஷ்டமாய்த்தெரிகிறது.

அப்பய்யதீக்ஷிதாளின் மஹிமையை

विश्वेश्वरेषु कश्चन पितामहो न इति विस्रम्भः ।

என்பதால் ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதாள் இக்கருத்தை வெளியிடுகின்றனர், இரங்காாஜதீக்ஷிதர் பேராநந்தங்கொண்டு ஜாதகாதி ஸம்ஸ்காாங்களைச்செய்து பிராம்மணர் முதலான யாவரையும் கனக தான்யம் முதலானதால் களிப்புறச்செய்து அன்பின்மேலீட்டால் அக்குழவியை 'அப்பா' என்றழைத்தார். அது காாணமாகவே, அப்பதீக்ஷிதர், அப்பயதீக்ஷிதர், அப்பய்யதீக்ஷிதர் என்று பலவிதமாகப் பெயர் வழங்கலாயிற்று. இவருடைய மாமன் விரிஞ்சிபுரத்தில் வஸித்ததால் விரிஞ்சிபுரத்திலேயே இம்மஹானின் அவதாாம் ஏற்பட்டதென்று அப்பிராந்தத்தினர் சொல்கின்றனர். தகப்பனுால் இவாளுக்கு மந்திரபூர்வகமாக விநாயகர் என்ற சர்மா வைக்கப்பட்டது.

சாத்காலத்துச் சந்திரன்போல் வளரும் இக்குமாானைக்கண்ணுற்றுக்களிக்காதவர் யாருமில்லை. பிதா காலந்தவறுமல் ஸகல ஸம்ஸ்காாங்களையும் புதல்வனுக்குச்செய்தார், $2\frac{1}{2}$ வயதில் சௌளம் நடந்தது. இவர் சிறு குழந்தையாயிருக்குந்தருணத்திலும்புழுதி மணலில் விளையாடும்போது மணலால் சிவலிங்கஞ்செய்து அதில் பகவானையர்ச்சிப்பது யாவருக்கும் வியப்பையளித்தது ஆச்சர்யமில்லை. ஏனெனில் ஈச்வானே தன்னைத்தானே பூஜைசெய்துகொள்கிறார் என்பதை ஆத்மபூஜையென்று சொல்வது வழக்கம். அவதரித்தவர் ஈச்வானேயாதலால் அப்படி பூஜிப்பது தகுதியே. இச்சந்தர்ப்பத்தில் அடுத்த குமாான் அப்பய்யதீக்ஷிதாளின்

குணங்களோடு பொருந்தினவனாய் ஜனித்தார். அவருக்கு ஆச்சார்யதீக்ஷிதாள் என்று பிதாமஹரின் நாமமிடப்பட்டது. ஆச்சான் தீக்ஷிதாள் என்று உலகத்தில் வியவஹாரமேற்பட்டது. கங்காவதரணத்தில் நீலகண்டதீக்ஷிதாள்

**श्रीकण्ठचरणासक्तः श्रीमानप्पय्यदीक्षितः** என்றுதொடங்கி

**तत्समानप्रभावस्य तदनन्तरजन्मनः ।**

**आसीदाचान्दीक्षितस्य पुत्रो नारायणाध्वरी ।**

என்று விஸ்தாரமாகக் கூறியிருக்கிறார்கள்.

## 5. வித்யாப்யாஸம்,

5-வது வயதில் பிதா அப்பய்யதீக்ஷிதாளுக்கு உபநயனஞ் செய்து தானே வித்யாப்யாஸஞ் செய்வித்தார். இவ்விஷயம் ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதாளின் நூற்களாலேயே தெளிவாய்த் தெரிகின்றது. ஸித்தாந்தலேச ஸங்கிரஹத்தில்,

**शुध्यै सङ्कलयामि तातचरणव्याख्यावचः ख्यापितान् ।**

என்பதாலும் பரிமளம் முதல் பாதம் முடிவில்

**महतामपि मान्यतमं विदुषां विनिवेश्य गुरुं हृदि वैश्वजितम् ।**

என்பதாலும் நியாயரக்ஷாமணியில்

**श्रीरङ्गराजमासीनं गुरुमानतोऽस्मि ।**

என்பதாலும் மற்றுமுள்ள சிவதத்வவிவேகம் முதலான நூற்களாலும் வெளியாகிறது. ஈச்வராவதாரமானதால் குருபதேசம் என்ற வியாஜத்தை மட்டிலும் முன்னிட்டு வித்தைகள் யாவுமே தாமே தீக்ஷிதாளையடைந்தன. ஆசான் தீக்ஷிதரும் அவ்விதமே ஜனகரிடம் ஸகலவித்தைகளையும் கற்றுக்கொண்டார். உசிதகாலத்தில் ஸகல ஸம்ஸ்காரங்களையும்பெற்று ஸ்னாதக விரதத்தை முடித்து, திசையெங்கும் வித்யாபாடவத்தாலும், சிவபக்தியாலும், புகழ் வாய்ந்த இம்மஹானையாவரும் போற்றினர்.

இம்மஹானைக் கண்ணுற்ற வேந்தர்கள் மந்திரியும், புருஷர்கள் புருஷோத்தமனும், சிவத்ரோஹிகள் மிருத்யுவாயும், ஜோஸியர்கள் ஸகல வித்யாதிபதியான ஈசுவரனும், வித்வான்கள் ஸபைநாயகனும்கருதினர். மைந்தனின் குணகணங்களினாலும்,மன்னர்

களின் மதிப்பாலும் போற்றப்பட்ட ரங்கராஜதீக்ஷிதாள் ஸ்ரீ நடராஜனிடம் ஐக்கியமானார். வேந்தர்கள் ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதாளைத் தகப்பனாரைக் காட்டிலும் அதிகமாக பக்தியுடன் உபசரித்தனர்.

## 6. ராஜாக்களின் ஆச்ரயம்.

கிருஷ்ணராஜனுக்குப் பிறகு தஞ்சாவூரில் நரஸிம்ம ராஜாவும் வேலூரில் சினபொம்மனும் பிரஸித்திபெற்றிருந்தனர். அவர்கள் நமது தீக்ஷிதாளையும், தாத்தாச்சார்யாளையும், கனகவர்ஷத்தாலும், பூஜித்தார்கள். தீக்ஷிதாள் தங்கள் வாழ்நாளை ஸ்ரீ காஞ்சியிலும் தஞ்சாவூரிலும், சிதம்பரத்திலும், விரிஞ்சிபுரத்திலும், அடயப்பலத்திலும் உபயோகப்படுத்தினர். சின்னபொம்மன், விஜயநகர் ஸதாசிவமஹாராஜனுக்கும், வென்னுகொண்டா கர்னாட ராஜனுக்கும், ஸ்ரீரங்கமஹாராஜனுக்கும் சிற்றரசனாயிருந்தான். சின்னபொம்மனுடைய வேண்டுகோளால், ஸதாசிவ மஹாராஜாவாலும் ரங்கமஹா ராஜாவாலும் கொடுக்கப்பட்டதான சாஸனபத்திரங்கள் (Vellur) ஜ்வரகண்டேசுவராலயத்தில் கல்லில் எழுதப்பட்டு காணப்படுகின்றன. அவைகளும் 1488 (A D. 1566) சகாப்தத்தில் 1497 (A.D. 1575) சகாப்தத்திலும் எழுதப்பட்டிருக்கின்றன. (Vide PP. 69-75 Volume 1. South Indian Inscriptions by Dr. E. Hultzsch)

## 7. ஸ்ரீரத்னகேடதீக்ஷிதாள் என்ற ஸ்ரீநிவாஸதீக்ஷிதாள்

இம்மஹான் ஸ்ரீகர்னாடக தேசாதிபதியான சூரப்பநாயகன், ஆர்யாவர்த்தம் புனா மார்வாடீ ஸிம்ஹலம் ஓட்ரம் இவைகளுக்குச் சக்கிரவர்த்தியாயிருந்த சந்திரசேகரராஜன் முதலான வேந்தர்களால், ஸபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவரின் ஜன்மபூமி துண்டீரமண்டலத்திலுள்ள தூப்பில் என்ற சிறந்த கிராமம். இக்கிராமத்திற்கே சூரஸேநம் என்று மறுநாமமிருக்க வேண்டுமென்று, இம்மஹானியற்றிய (भावना पुरुषोत्तम) பாவநா புருஷோத்தமநாடகத்துப்பிரஸ்தாவனையால் தெரிகிறது. அதாவது ஸூத்திரதாரன் எனத்தொடங்கி விச்வாமித்திரவம்சத்திற்கு முக்தாமணியும் ஸ்ரீகிருஷ்ணபட்டாரகரின் பௌத்திரனும் ஸ்ரீபவஸ்வாமிபட்டரின் புத்திரனும் லக்ஷ்மீயென்பவளின் உதரத்திலிருந்து ஆவிர்பவித்தவரும் (कविवादिगजकेसरी) கவிவாதிகஜ

கேஸரியும், சோளமஹாராஜாஸ்தான பண்டிதருமான ஸ்ரீரத்ந கேட ஸ்ரீநிவாஸாத்வரீந்திரர் இந்நூலையியற்றினவர் என்று அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இம்மஹான்போன்ற வித்வந்மணிகள் அக்காலத்து ராஜாக்களால் எக்காரணத்தைக்கொண்டோ தங்களிடமழைப்பித்துத் தங்கள்தங்கள் ராஜ்யங்களில் தங்கும்படி வேண்டப்பட்டு பிரதான பண்டிதர்களாய் மானிக்கப்பட்டிருப்பதால் குறிப்பாக எந்த எந்த ராஜஸபையில் எத்துணைகாலம் ஒவ்வொருவரும் வஸித்தனர் என்று வரையத்தீர்மானிக்கமுடியாமலிருக்கிறது.

இம்மஹானின் புத்திரரான ஸ்ரீராஜசூடாமணிதீக்ஷிதாளால் இயற்றப்பட்ட ருக்மிணீபரிணய காவ்யத்தின் உரையாசிரியரான பாலயஞ்ஞதேவேச்வரரால் தொடக்கத்தில் ரத்னகேடகதீக்ஷிதாள் என்ற பெயர் ஏற்படக்காரணம் கூறப்பட்டிருக்கிறது.

सन्ध्यासन्धुक्षिताम्भोचरनलिकगणादुद्गतान्सीसखण्डान्
ताराकारान्निरोद्धुं शशिरविकपटाद बिभ्रतो रत्नखेटौ ।
अन्योन्यं युध्यमानावुदयचरमभूभृत्प्रवीराविति द्रा-
गुक्त्या ख्यातापराख्यः क्षितिपतिवयसा रत्नखेटाध्वरीति ॥

ஒரு ஸமயம் இம்மஹானை வெல்வதற்கு எண்ணங்கொண்ட ஸ்ரீ காசிக்ஷேத்திரத்துப் பண்டிதமணிகள் அருணோதயவேளையில் இம்மஹான் வீட்டு வாயிலையடைந்து, அங்கு சாணி தெளிக்கும் அவ்வீட்டு அம்மாளிடம், தீக்ஷிதாள் எங்கே? அவரோடு வாதம் புரிய வந்திருக்கிறோம் எனக் கேழ்க்கவே, அவ்வம்மாள் சாணி தெளிக்கும்போது அமையக் கூடிய தாளத்திற்கிசைந்த அடியிற்கண்டச்லோகத்தால் அவர்களின்செருக்கை போக்கினாள்.

विपश्चितामपश्चिमेऽथ रत्नखेटदीक्षिते
सपत्नजित्वयव्रतो विवादकेलिमागते ।
बृहस्पतिः प्रजल्पति प्रसर्पति क्व सर्पराट्
षडाननो नताननः चतुर्मुखश्च दुर्मुखः ॥

வித்வான்களில் முதல்வரான இரத்னகேடதீக்ஷிதாள் சாஸ்திர வாதத்திற்கு நிகழும்போதே, ஆயாஸமின்றியே பிரதிவாதிகளை

ஜயிக்கின்றனர். அப்போதே பிருஹஸ்பதி பிதற்றுகிறார். ஸர்ப்ப ராஜன் எங்கே ஊர்கிறான்.? ஆறுமுகன் தலைகுனிகிறான். சதுர் முகனும் முகங்கோணுகிறான் என்று அச்செயுளின் கருத்து.

## 8. அமாவாஸ்யையில் சந்திரோதயம் செய்வித்தது.

ஒரு ஸமயம் சந்திரசேகரசக்கிரவர்த்தியின் சபையில்வஸிஷ்டருக்குச் சமமான வித்வான்களின் முன்னிலையில் ஸாயங்காலத்தில் ஜோஸியர்களால் காலையில் அறிவிக்கப்பட்டிருந்தும் மறதியால் இன்றைய தினம் என்ன திதி? என்று வேந்தன் கேட்கும்போது, இன்றை தினம் பௌர்ணமி என்று அவஸாத்துடன் இம்மஹான் சொல்லவே, சபையோர்கள் கைகொட்டிசிரித்தனர்.

அப்போது அரசனும், யாவுமறிந்த இம்மஹான் எவ்வாறு பௌர்ணமி என்று கூறினார் என்று சற்றுத் தயங்கும்போது, தீட்சிதாள் ராஜனே! என் வார்த்தையில் ஐயமுறவேண்டாம். சந்திரோதயத்தால் ஐயம் நீங்கப்பெறலாம். அக்னிஹோத்திர வேளை நெருங்கிவிட்டது. என்று சொல்லிப் புறப்பட்டுத் தடாகமடைந்து ஸாயங்காலத்து அனுஷ்டானத்தைச் செய்தார். அப்போது அரசன் சந்திரசாலா என்ற மாளிகையில் சந்திரோதயத்தை எதிர்பார்த்திருந்தான் அத்தருணம் தீட்சிதாள் சந்திரகலாதாரிணியான அம்பாளைத்தியானித்து அர்க்கியத்தை விடவே, அம்பாள் முன்தோன்றித் தனது தாடங்கத்தைக்கொடுத்து மறையவே ஸ்ரீ சக்கிரரூபமான அத்தாடங்கம் தனது பக்த ஜனத்தின் புகழைப் பதினாங்கு புவனங்களுக்கும் தெரிவிக்கும் பொருட்டு ஸ்ரீ தேவியால் எழுதப்பட்டுப் பிரசுரப்படுத்தப்பட்ட யோக்யதா பத்ரமோ, அல்லது ஆகாயமாகிற தாமரையோடையில் விளங்குகிற வெண்தாமரை மலரோவென ஊஹிக்கக் கூடியதாய் பூர்ண சந்திரமண்டலம் ஆகாயத்தில் பிரகாசித்தது. உடனே ஆச்சர்யக் கடலில் மூழ்கின மஹாராஜன் தீக்ஷிதாளை ஸுவர்ணபீடத்தில் அமர்த்தி இரத்தினாபிஷேகம் செய்து இரத்தினம்பதித்த கேடகத்தை(பதக்கத்தை)யும் அளித்து வணங்கினான். அதன் காரணமாக இரத்தின கேடகத்தை தீக்ஷிதாள் எனத் திருநாமம் பாவிற்று என்று சிவானந்தயோகிகள் தமது அப்பயதீட்சிதச்சரித்திரத்தில் பிரஸ்தாபித்திருக்கிறார்.

158



மேலும் அம்மஹாராஜா தீக்ஷிதாள் வெளிக்கிளம்பும்போது, பகலிலும் இரண்டு கஜங்களின் துதிக்கைகளால் தந்தங்களின் நடுவில் தீபட்டிப்பிடிக்கச்செய்து மற்றுமுள்ள பல்லக்குமுதலான மரியாதைகளுடன் दिग्दान्तिप्रद्योतितादिवाप्रदीपः என்ற பட்டத்தையு மளித்தான்.

## :9. ஸ்ரீகாமாக்ஷியின் அநுக்கிரஹம்,

ஒருஸமயம் அவ்வாசன் எத்திசையிலும் அப்பய்யதீட்சிதா ளின் புகழ் பாவியிருப்பதைச் செவியுற்று இரத்னகேடதீட்சிதா ளிடம் அம்மஹானைத்தாங்கள் கேள்விப்பட்டதுண்டோ என் கவே அவர்களைப்பற்றி மிகவும் கேட்டிருக்கின்றேன். அவர்களை இங்கு அழைக்க ஸந்தர்ப்பமுமேற்படவில்லை. ஆகையால் நான் ஸ்ரீகாஞ்சிநகரம் சென்று அவர்களை வாதுக்கழைத்து வெல்கி றேன் என்று மறுமொழி பகர்ந்தார். பிறகு அக்கருத்தை நிறை வேற்ற எண்ணின ஸ்ரீரத்னகேடதீட்சிதாள் அரசனின் விடை பெற்று ஸ்ரீகாஞ்சியையடைந்து ஸ்ரீகாமாட்சிதேவியையாரா தித்து தேவியின் பிரஸாதத்தை எதிர்பார்த்தவராயிருந்தார்.

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.

---

நாச்சியார்கோயில் லக்ஷ்மீமந்திரம் அபிநவஸரஸ்வதி குருவர்யவித்வான் ஸ்ரீவாத்ஸ்யஉ-வே கிருஷ்ணமாசார்

## சாஸ்திரீய விவாஹமுறை.

இப்புண்யபூமியின் முககமலம்போன்ற இந்தியாவின் கண் ஹிந்துமதம் பிராம்மணஸத்ஸம்பிரதாயம், வேதசாஸ்திரம் முத லிய ஸநாதனதர்மங்களுக்கு மிகவும் முரண்பட்டவைகளான ருதுமதிவிவாஹம், விவாஹவயதுசட்டமசோதா, ஸம்மதவயது மசோதா இவைகளைக்கண்டித்து ஸ்ரீஆசார்யமடாதிபதிகளும், ஆசார்யபுருஷபீடாதிபதிகளும் ஆஸ்திகபுமான்களும் உத்தமஸ்திரீ களும் அரும்பாடுபட்டு ஆங்காங்கு பிரசாரம்செய்துவருகின்றனர்.

அஃதாவது. अष्टवर्षा भवेत्कन्या नववर्षा तु रोहिणी ।
दशवर्षा भवेद्गौरी अत ऊर्ध्वं रजस्वला ॥

159



8-வயதுள்ள பெண் கன்யா, 6-வயதுள்ளவள் ரோஹிணீ 10வயதுடையவள் கௌரீ, அதற்குமேற்பட்ட வயதுள்ளவளே ரஜஸ்வலை என்று முறையே கூறப்படுகிறாள்.

அவ்வித [ரஜஸ்வலா]ருதுமதீவிவாஹத்தைப்பற்றி நிந்தித்துச் சொல்லும் வசனங்களாவன:—

पितुर्गृहेषु या कन्या रजः पश्यत्यसंस्कृता ।
सा कन्या वृषली ज्ञेया तत्पतिर्वृषलीपतिः ॥
वृषलीपतिभुक्तानि श्राद्धानि च हवींषि च ।
पितरो न च गृह्णन्ति दाता स्वर्गं न गच्छति ॥

10-வயதுக்குமேற்பட்ட ரஜஸ்வலை என்ற ருதுமதிஸ்திரீ, பிதாவின் கிருஹத்தில் கல்லியாணமாகாமலிருப்பளேயானல் பிராஹ்மண ஜாதியிற்பிறந்த பெருமை போய்

वृषं धर्मं लुनातीति वृषलः लूञ्छेदने तस्य स्त्रीत्वार्थे ङीषि वृषली.

தர்மத்தைக் கெடுக்கிறவர்கள் என்ற அர்த்தநிரூபணத்திற்குறிய வ்ருஷலஜாதியில் உதித்த ஸ்திரீயாகிறாள்.

அவளை விவாஹம்செய்த புருஷன் வ்ருஷளீபதியானதால் அவன் புஜித்த ச்ராத்தம் நஷ்டமாவதுடன் பித்ருதேவதைகளும் ஹவிஸ்ஸுக்களைப் பெருகிறார்களில்லை.

அப்பெண்ணை தானம்செய்த தகப்பன்தாய்மார்களுக்கு ஸ்வர்க்கலோகாநந்தானுபவமும் கிடைப்பதில்லை.

कन्यां ददद्ब्रह्मलोकं रौरवं तु रजस्वलाम् ।

கந்யாதானத்தால் ப்ருஹ்ம லோக பிராப்தியும், [ரஜஸ்வலா]ப்ரௌடாஸ்திரீ தானத்தால் ரௌரவ நரகமும் கிடைக்கிறதாம்.

ஆகவே இந்த தர்மம் முக்கியமாக பிராஹ்மணர்களுக்கு உரித்தாயுள்ளது.

गर्भाष्टमेषु ब्राह्मणमुपनयीत ப்ராஹ்மண வகுப்பைச்சேர்ந்தவருக்கு கெர்ப்பவாஸம்முதல்8-வதுவயதில் உபநயனம் செய்யவேண்டுமென்று எப்படித் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதோ அதுபோலவே அந்த ப்ராஹ்மண ஸ்திரீக்கும் வைதிகஸத்கார்யரூபமான உபநயனத்திற்கு ஸமானமாயுமுள்ள விவாஹத்தை பால்யகந்யாபருவமான 8வது வயதிலேயே செய்யும்படி சுருதிஸ்ம்ருதிதிஹாஸங்

களிலேற்பட்டிருக்கிறது. அவைகளையே நம்பியிருக்கிற ப்ராஹ்மண ஸமூஹத்தார் மேற்கண்ட ஸநாதனதர்ம ஸத்கார்யங்களைக் கைநழுவவிட நியாயமே இல்லை.

பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாண்டெடுத்தேத்தி
காப்புநாண்கட்ட ......
மத்தளங்கொட்ட
மதுசூதனன் வந்து என்னை கைத்தலம்பற்ற
வாய்நலார் நல்லமறையோதி மந்திரத்தால்
தீ வலம்செய்ய
நாரணன்நம்பி செம்மையுடைய திருக்கைப்பாற்றான்பற்றி
அம்மி மிதிக்க
அரிமுகனச்சுதன் கைமேலென்கைவைத்து
பொரிமுகந்தட்ட
மங்கலவீதிவலஞ்செய்து மணநீர்
மஞ்சனமாட்ட

என்றபடி விவாஹஸமயத்தில் வேதமந்திரோச்சாரண புரஸ்ஸரமாக கங்கணம்கட்டுதல், பிராஹ்மண சிஷ்டர்கள் ஆசீர்வதிப்பது, பாணிக்கிரஹணம், அம்மி மிதித்தல் सप्तपदी அக்நியைப் பிரதக்ஷிணம் செய்தல், பொரி இடுதல் ஊர்வலம் மங்களஸ்நாநம் முதலிய கல்யாணஸமயத்தில் நடைபெறக்கூடிய சாஸ்திரானுஷ்டானங்களையும் கூறி இந்தப்படி அனுஷ்டித்தால் நல்ல மக்களைப்பெற்று அத்தம்பதிகள் மகிழ்வார்கள் என்று பல ச்ருதியுடன் எல்லோரும் அறியுமாறு ஜகன்மாதாவான கோதாதேவியே நிரூபித்திருக்கிறார்.

அவ்விதமே, தானும் கந்யாபருவத்திலேயே ஸ்ரீமந்நாராயணனை மணம்புரிந்து இக்காலத்திலும் நாமனைவரும் கண்ணாறக் கண்டு களிக்கும்படி விளங்கி ஸேவை தந்தருளுகிறார்.

ஆகவே ருதுவாகி முதிர்ந்த வயதுள்ள பெண்கள் மடம், அச்சம், நாணம் பயிர்ப்பு முதலியவைகளை ஆணிகலமாயுள்ளவர்களாதலால் கல்யாணஸபையில் வந்து சாஸ்திர ஸம்பிரதாயங்களுக்குரிய ஸத்கார்யங்களை அனுஷ்டிக்கமாடடார்கள்.

(தொடரும்.)

ஸ்ரீவாத்ஸ்ய உ-வே. கிருஷ்ணமாசார்யர்.